5. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதி 23ஐ தளர்த்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 23-ஐ தளர்த்தி இப் பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக் கொள்ள வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) விதி 41 (3) ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 41 (3)இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை கவனஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

திரு. துரைமுருகன்: சார், திருப்பூர் நிகழ்ச்சிப்பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் நாங்கள் ஏற்கனவே கொடுத்திருந்தோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் வருவதற்கு முன்பே அதுபற்றி திரு. அம்பிகாபதி பிரச்சினையை எழுப்பி பதில் சொல்லி விட்டேன். அரசினர் தரப்பிலிருந்து பதில் வருமானல் அது எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 10-10)

திரு க. சுப்பு: தலைவரவர்களே, பர்மா தமிழர்கள் சம்பந்தப் பட்ட ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையும் விசாரித்தேன். முழுத் தகவல்கள் வர வேண்டுமென்று அமைச்சர் சொன்னதால் நாளைக்கு எடுத்துக்கொள்வதாகவோ அல்லது தகவல்கள் வந்த வுடன் எடுத்துக்கொள்வதாகவோ சொல்லியிருக்கிறார்கள்.

திரு ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, அதைப் போல நானும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் கேட்டதற்குச் சொல்லி விட்டேன். எல்லாம் அங்கேதான், இங்கே கிடையாது.